என்னைப் பெரிதும் வாட்டிற்று. அந்த சோகத்தோடு, துயரத்தோடு தான் இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

திரு. ஆதிமூலம் அவர்கள் சுதந்திராக் கட்சித் தலைவர். அவரை நான் ரொம்பவும் பாராட்டுகிறேன். கொள்கையில் வித்தியாசம் இருக்கலாம். தைரியமாக இதுதான் என்னுடைய கொள்கை என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். எப்போதும் இரண்டுங் கெட்டான் நிலைமை கூடாது. நம்முடைய கருத்து இன்னதென்று தெள்ளத் தெளிய நாம் எடுத்துச் சொல்லியாக வேண்டும். அவரது கொள்கையில் இருந்து நான் மாறுபட்டாலும் அவர் நம்முடைய கொள்கையை எடுத்துத் தைரியமாகச் சொன்னதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்த மன்றத்திலே விவசாயிகளுடைய தோழர்கள் இருக்கிறார்கள், தொழிலாளர்களுடைய நண்பர்கள்இருக்கிறார்கள். பல்கலைக் கழகத்தை விட்டு வெளி வந்துள்ள மாணவ ரத்தினங்கள் இருக்கிறார்கள். சட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். நான்கு கோடி மக்களுக்கு வழிகாட்டியாக இந்த மன்றம் இருக்கிறது. நான்கு கோடி மக்களது நன்மை, தீமைகளுக்கு அவர்களது வாழ்வையே நடத்திச் செல்லும் தலைமை அரங்கமாக இது விளங்குகிறது. சமுதாயத்தின் துயர் களைகின்ற ஜீவசக்தி கொண்டது இந்த மன்றம். இப்போது நாம் கொண்டு வந்திருக்கும்படியான இந்த மசோதா ஒரு பெரிய முதல் தோற்றமாகத்தான் வந்திருக்கிறது. கோடிக்கணக்கான மக்களுடைய நல்வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்கு, வருங்கால சமுதாய அமைதிக்கு, வாழ்வுக்கு இது வழித்தோன்றலாகத்தான் வந்துள்ளது. இதை எல்லோரும் வரவேற்றுப் பேசியதற்கு நன்றி தெரிவித்து, இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1968), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட்டு, சட்டமாக ஆக்கப்பட்டது.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) 1923-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்தலும், வரைவு அறிவிப்பை ஏற்றலும்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"1923-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்து மேற்படி பிரிவின் கீழ் மாநில

அரசாங்கம் வெளியிடவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்புக்கு மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டும்.

வரைவு அறிவிப்பு

1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ம் நாளிட்ட தமிழ்நாடு அரசாங்க இதழில் 1-ம் பக்கத்தின் விதிகள் பிற்சேர்க்கையின் 899–902-ம் பக்கங்களில் வெளியிடப்பட்ட, 1968-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ம் நாளிட்ட S.R.O.—A 769/1968-ம் எண் அறிவிப்பின் தோற்றுவாயில் கீழ்க்கண்ட திருத்தங்களைத் தமிழ்நாடு ஆளுநர் இதனால் செய்கிறார். பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் III/1923) 7-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு இத திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு சட்டமன்றத்தின் தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்கூறிய அறிவிப்பின் தோற்றுவாயில், கீழ்க்கண்ட பாராவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அதாவது—

"2. இதனால் செய்யப்படும் திருத்தங்கள் 1969-ம் ஆண்டு பிப்ரவரி 1-ம் நாள் முதல் செயலுக்கு வரும்."

இந்தத் தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(ஆ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை முடிவு செய்தல்) விதிகளுக்குத் திருத்தம்

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move :

"That the following amendment to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 published with Revenue Department Notification, S.R.O. No. A. 1240 of 1965, dated the 25th November 1965 at pages 1284-1296 of Part V of the *Fort St. George Gazette*, dated the 1st December 1965 which it is proposed to issue under sub-section (1) of section 94 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961) be approved by the Legislature under the proviso to the said sub-section.

AMENDMENT.

For sub-rule (3) of rule 6 of the said rules, the following sub-rule shall be substituted :

"(3) The value for the surplus land and for the buildings and trees thereon, if any, shall at the option of the assignee, be payable in a lumpsum or in equal annual instalments not exceeding twenty, with interest at the rate of five per centum per annum on the outstanding instalments.